## பண்டாரவளை மாநகர சபை

## பதுளை மாவட்டம்

----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூன் 04 திகதி மாநகர சபையின் நகர பிதாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, பண்டாரவளை மாநகர சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் சபைக்கு பெற்றுக் கொடுத்திருந்த பல் கருமங்களுக்கான 10 நடமாடும் கடைகளின் பெறுமதி ரூபா 265,000 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 265,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பண்டாரவளை மக்கள் வங்கியில் பேணப்படுகின்ற கணக்கு இலக்கம் 037-2-001-6-0019583 கொண்ட தற்காலிக வைப்புக்கள் மீளாய்வாண்டில் ரூபா 554,385 இற்கான வட்டி வருமானத்தை கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பணம் மற்றும் பணத்திற்கு சமனானவற்றின் பெறுமதி ரூபா 554,385 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 7,576,443 இற்கான முத்திரை கட்டண வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 7,576,443 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) விஷேட துரித கிராமிய சுற்றுலா நிகழ்ச்சித் திட்டம் - 2014 இன் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த பிந்துனுவெவ பதுளுகஸ்தென்ன பாதையை கொங்கிரீட் பண்ணும் நிர்மாண வேலையின் முடிவுற்ற வேலைகளின் பெறுமதி ரூபா 478,096 தொகை எனினும், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 500,000 தொகைக்காக நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 21,904 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) இளிகம்பெத்த சனசமூக நிலையத்தின் குளியல் அறை நிர்மாணிக்கும் நிர்மாண வேலை தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 161,778 தொகை எனினும், ரூபா 311,332 இற்கான தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 149,554 தொகையினால் குறைவாகவும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோரின் பெறுமதி அதே தொகையால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மலசல வடிகால் முறைமையினை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றுள்ள கடன் தொகை தொடர்பாக 2006 அக்டோபர் 01 திகதி முதல் 2013 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,216,268 தொகை மற்றும் மீளாய்வாண்டு தொடரபான செலுத்த வேண்டிய ரூபா 237,732 இற்கான வட்டித் தொகையினை கணக்கீடு செய்யாமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 2,454,000 இனால் குறைவாக மற்றும் திரண்ட நிதியக் கணக்கின் மீதி அதே தொகையால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

ஒரு கணக்கு விடயம் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் துணைபதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 2,828,817 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 11,129,692 ஆக காணப்பட்டமையால் ரூபா 8,300,875 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்.டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாவாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 107,385,894 ஆகக் காணப்பட்டதுடன் அத் திகதியில உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 87,251,857 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 153,046,882 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

நிதி அதிகாரங்களை கையளிக்கப்படாமல் சபையின் தொழில்நுட்ப அலுவலரினால் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்களின் 138 ஆம் ஏற்பாடுகளுக்கு முரணாக 23 சந்தர்ப்பங்களில் ரூபா 11,152,388 பெறுமதியான உறுதிச் சான்றுகள் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 35,355,602 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 33,540,553 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 1.815,049 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம் பின்வருமாறு ஆகும்.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 60,250 |
| முத்திரைக் கட்டணம் | 1,322,000 |
| | 1,382,250 |

3 செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 செயற்பாட்டு திறமையின்மைகள்

---

04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 31,295 பெறுமதியான 258 லீற்றர் டீசல் இனை ஓட்டக் குறிப்புக்களில் உற்படுத்தியிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான பின்வரும் சொத்துக்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்காமல் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

I. 74 – 4315 குபோட்டா கை டிரக்டர்
II. 49 – 8519 மர்ஸி பர்கியுசன் டிரக்டர்
III. 48 – 4128 கலி பவுசர்

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு